



செயல்பாட்டு அறிக்கை
டிசம்பர் 2024 - மே 2025

# டாக்டர் பி.டி.ஆர். பழனிவேல் தியாக ராஜன்

மதுரை மத்திய சட்டமன்றத் தொகுதி உறுப்பினர்
தகவல் தொழில் நுட்பவியல் & டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர்
தி.மு.க. சொத்துப் பாதுகாப்புக்குழு செயலாளர்

/ptrmadurai /meendumptr /PTRmadurai

ஓரணியில் தமிழ்நாடு என்ற முழக்கத்தோடு கழகத் தலைவர் மாண்புமிகு முதல்வர் அவர்கள், தமிழ்நாட்டை ஒருங்கிணைத்து வரும் இந்தத் தருணத்தில், இந்த அறிக்கையை உங்களுக்கு சமர்ப்பிப்பதில் பெருமை கொள்கிறேன். தொடர்ந்து 9 ஆண்டுகளாக ஒவ்வொரு ஆறு மாதங்களுக்கு ஒருமுறை எனது செயல்பாட்டு அறிக்கையை உங்களுக்குத் தவறாமல் அனுப்பி வைப்பதன் மூலம் உங்கள் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக தமிழ்நாடு அரசின் தகவல் தொழில்நுட்பவியல் & டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சராக எனது செயல்பாடுகளை உங்களுக்கு தெரிவிப்பது எனது கடமையென கருதுகிறேன்.

இந்தியாவில் உள்ள பிற மாநிலங்கள் அனைத்தும் தமிழ்நாட்டின் வளர்ச்சியை அளவுகோலாக வைத்து, இங்கு செயல்படுத்தப்படும் திட்டங்களை அவர்களும் பின்பற்றத் தொடங்கியுள்ளனர். மக்களைத் தேடி செல்லும் நம் திராவிட மாடல் அரசின் சாதனைகள் ஒவ்வொரு குடிமக்களுக்கும் சென்றடைகிறது.

அந்த வகையில் நாடு போற்றும் திராவிட மாடல் அரசில் எனது தலைமையிலான தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சகம் செய்த பணிகளையும் இந்த அறிக்கையில் பட்டியலிட்டுள்ளேன். டிசம்பர் 2024 - மே 2025 வரையிலான எனது 6 மாத கால செயல்பாட்டு அறிக்கையினை உங்களுக்குச் சமர்ப்பிக்கிறேன். ■



# சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் செயல்படுத்திய திட்டப்பணிகள்

## மதுரை மத்திய சட்டமன்றத் தொகுதி உறுப்பினராக எனது பணிகள்

மக்களுக்குத் தேவையான சாலை, தண்ணீர், கழிப்பறை, பள்ளிக் கட்டிடங்கள், அங்கன்வாடி கட்டிடங்கள், நியாயவிலைக் கடை கட்டிடங்கள் உள்ளிட்ட அத்தியாவசிய, மக்கள் அனுதினமும் பயன்படுத்தும் திட்டங்களை எனக்கு ஒதுக்கப்படும் சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியின் மூலம் செயல்படுத்தி வருகிறேன்.

அந்த வகையில், கடந்த டிசம்பர் 2024 முதல் மே 2025 வரையிலான 6 மாத காலத்தில் எனது தொகுதி மேம்பாட்டு நிதியில் நிறைவேற்றப்பட்டுள்ள திட்டப்பணிகளின் விவரம்.

1 வார்டு 77, சுப்பிரமணியபுரம், சண்முகநாதபுரம் சகாய மாதா பள்ளி அருகே ரூ.5 லட்சம் மதிப்பீட்டில் புதிய போர்வெல்-ஐ மக்கள் பயன்பாட்டுக்குத் திறந்து வைத்தேன்.

2 வார்டு 77, சுப்பிரமணியபுரம், சுண்ணாம்பு காளவாசல் அருகே ரூ.5 லட்சம் மதிப்பீட்டில் புதிய போர்வெல்-ஐ மக்கள் பயன்பாட்டுக்குத் திறந்து வைத்தேன்.

3 வார்டு 56, கரிமேடு மார்க்கெட் அருகில் ரூ.48 லட்சம் மதிப்பீட்டில் புதிய சமுதாய கூட கட்டிடம் கட்டி மக்கள் பயன்பாட்டுக்குத் திறந்து வைத்தேன்.

மேலும் பல்வேறு தனியார் நிறுவனங்களை ஒருங்கிணைத்து அவர்களின் சமூகப் பொறுப்பு நிதி (CSR) மூலம் பணிகள் நடைபெற்று வருகிறது.

அவற்றுள், வார்டு 50 ஆதிமூலம் அக்ரஹாரம், சிம்மக்கல் கஸ்தூரிபாய் காந்தி மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் , தமிழ்நாடு மின் நிதி மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகத்தின் CSR நிதியின் கீழ் 48 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய கழிப்பறைக் கட்டிடம் மற்றும் மராமத்து செய்யப்பட்ட வகுப்பறையைத் திறந்து வைத்தேன். அங்கு மராமத்து செய்யப்பட்ட வகுப்பறையை ஆய்வு செய்ததோடு விரைந்து மராமத்து செய்யப்பட வேண்டிய மற்ற பணிகள் குறித்து மாநகராட்சி கல்வி அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கினேன். பள்ளிகளில் செய்யப்பட்ட மராமத்து பணிகள் குறித்து மாணவிகளிடம் கேட்டறிந்தேன்.












# நலத்திட்ட உதவிகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் தலைமையிலான திராவிட மாடல் அரசு சமூகத்தில் ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, உரிமைகள் மறுக்கப்பட்ட ஆதரவற்ற விளிம்பு நிலையில் உள்ள மக்களைக் கண்டறிந்து அவர்களுக்கான புதிய திட்டங்களை வகுத்து சமூகத்தில் அம்மக்களைத் தலைநிமிரச் செய்து வருகிறது.

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, முதியோர் உதவித்தொகை, மாற்றுத்திறனாளி உதவித்தொகை, விதவை உதவித்தொகை, கணவரால் கைவிடப்பட்ட பெண்களுக்கான உதவித்தொகை மட்டுமின்றி ஏழைப்பெண்களுக்கு, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தையல் இயந்திரம், தேய்ப்புப் பெட்டி உள்ளிட்ட தொழில் உபகரணங்களைத் தமிழ்நாடு அரசு வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. அந்த வகையில், இதுவரை பயனடைந்தோர் விவரம் உங்கள் பார்வைக்கு வழங்குகிறேன்.

| இனங்கள் | எண்ணிக்கை | மதிப்பு |
|---|---|---|
| முதியோர் உதவித்தொகை (வருடத்திற்கு ரூ. 14,400) | 1105 | ₹. 1,59,12,000 |
| ஆதரவற்ற விதவை உதவித்தொகை (வருடத்திற்கு ரூ. 14,400) | 540 | ₹. 77,76,000 |
| மாற்றுத்திறனாளி உதவித்தொகை (வருடத்திற்கு ரூ. 18,000) | 63 | ₹. 11,34,000 |
| கணவனால் கைவிடப்பட்டோர் உதவித்தொகை (வருடத்திற்கு ரூ. 14,400) | 37 | ₹. 5,32,800 |
| முதிர்க்கன்னி உதவித்தொகை (வருடத்திற்கு ரூ. 14,400) | 13 | ₹. 1,87,200 |
| இரு சக்கர நாற்காலி (தேர்தல் பணிமனைக்கு வரும் மாற்றுத்திறனாளிகளுக்குச் சொந்த நிதியில் வழங்கப்பட்டது) | 58 | ₹. 4,58,200 |
| இரு சக்கர நாற்காலி (மதுரை மத்திய தொகுதியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குச் சொந்த நிதியில் வழங்கப்பட்டது) | 9 | ₹. 1,08,000 |
| இரு சக்கர நாற்காலி (சிறப்பு முகாமில் வந்த கோரிக்கைகளின் அடிப்படையில் வழங்கப்பட்டது) | 7 | ₹. 55,300 |
| மூளை முடக்கு வாத சிறப்பு நாற்காலி ( Cerebral Palsy Special Chair ) | 2 | ₹. 20,800 |
| மூன்று சக்கர சைக்கிள் | 3 | ₹. 18,100 |
| பேட்டரி பொருத்திய சக்கர நாற்காலி | 3 | ₹. 3,18,000 |
| மாற்றுத்திறனாளிகளுக்கான பெட்ரோல் ஸ்கூட்டர் | 55 | ₹. 60,50,000 |
| நடை பழகு சாதனம் | 2 | ₹. 4,290 |
| தையல் இயந்திரம் | 58 | ₹. 3,49,334 |
| மாற்றுத்திறனாளிகளுக்கான கைபேசி | 28 | ₹. 3,79,372 |
| காதொலி கருவி | 28 | ₹. 1,55,680 |
| தேய்ப்பு பெட்டி | 18 | ₹. 87,948 |
| பார்வையற்றவர்களுக்கான ஊன்றுகோல் & கண்ணாடி | 5 | ₹. 2,650 |
| முழங்கை ஊன்றுகோல் | 1 | ₹. 600 |
| செயற்கை அவயம் | 4 | ₹. 3,20,000 |
| சிறப்பு காதொலி கருவி | 1 | ₹. 6,00,000 |
| கொரோனா நிவாரண நிதி (ரூ.3,00,000) | 2 | ₹. 6,00,000 |
| மாநகராட்சி பள்ளிகளில் Smart Class (CSR நிதி) | 5 | ₹. 40,00,000 |
| அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி மாணவர்களுக்கு உதவித்தொகை ( HDFC வங்கி Parivardhan திட்டம்) | 97 | ₹. 32,83,000 |
| மொத்தம் | 2144 | ₹4,23,53,274.00 |

# இ சேவை மையம்

அரசு வழங்கும் திட்டங்கள், சேவைகளைப் பெறுவதற்கு எனது அலுவலகத்தில் இ சேவை மையம் செயல்பட்டு வருகிறது. எந்த வித கட்டணமின்றி மக்களுக்கு அனைத்து சான்றிதழ்களும், நலத் திட்டங்களுக்கான பதிவுகள் இங்கு இலவசமாக செய்து தருகிறோம். அந்த மையத்தின் மூலம் பயனடைந்தோர் எண்ணிக்கை மற்றும் விவரம்.

TNeGA

## இலவச இ-சேவை மையம்

| சேவைகள் | எண்ணிக்கை | மதிப்பீடு (ரூ.) |
|---|---|---|
| முதியோர் உதவித்தொகை | 18 | 180 |
| வருமானச் சான்றிதழ் | 44 | 2640 |
| இருப்பிடச் சான்றிதழ் | 13 | 130 |
| விதவை உதவித்தொகை | 12 | 120 |
| சாதிச் சான்றிதழ் | 24 | 1440 |
| விதவை சான்றிதழ் | 4 | 240 |
| மாற்றுத்திறனாளி உதவித்தொகை | 2 | 20 |
| வாரிசு சான்றிதழ் | 14 | 840 |
| முதல் பட்டதாரி சான்றிதழ் | 1 | 60 |
| OBC சான்றிதழ் | 7 | 420 |
| குடும்ப அட்டை திருத்தம் | 3 | 0 |
| மாற்றுத்திறனாளி உதவித்தொகை (ரூ. 2000) | 1 | 10 |
| மாற்றுத்திறனாளி பெட்ரோல் ஸ்கூட்டர் | 6 | 360 |
| குடும்ப அட்டை நகல் | 1 | 0 |
| அமைப்புசாரா தொழிலாளர் ஆயுள் சான்று | 2 | 0 |
| அமைப்புசாரா தொழிலாளர் கல்வி உதவித்தொகை | 4 | 0 |
| அமைப்புசாரா தொழிலாளர் அடையாள அட்டை | 7 | 0 |
| அமைப்புசாரா தொழிலாளர் அடையாள அட்டை திருத்தம் | 1 | 0 |
| OTR பதிவு எண் | 1 | 0 |
| திருமணம் ஆகாதவர் சான்று | 2 | 120 |
| மொத்தம் | 167 | 6580 |

# மதுரையில் டைடல் பார்க்

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கனவில் உருவாகி இன்று நம் தமிழ்நாட்டு இளைஞர்களின் வாழ்வில் ஒளியேற்றிக் கொண்டிருக்கும் தகவல் தொழில்நுட்பவியல் துறையின் ஊற்றுக்கண்ணாக இருந்தது அன்று அவர் தொடங்கி வைத்த டைடல் பூங்காவாகும். அதன் பின் பல்வேறு மாவட்டங்களில் அவர் டைடல் பார்க் தொடங்கிட வழிவகுத்தார்.

அதன் தொடர்ச்சியாக, அவர் வழியில் நடைபோடும் நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்கள் திருச்சியில் 403 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 5.58 இலட்சம் சதுர அடி பரப்பளவிலும், மதுரையில் 314 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 5.34 இலட்சம் சதுர அடி பரப்பளவில் தரைத் தளம் மற்றும் பன்னிரண்டு தளங்களுடனும் டைடல் பூங்காக்கள் அமைக்க அடிக்கல் நாட்டினார். இப்பூங்கா அமைவதற்கான முதற்கட்ட பணிகளை நான் நிதியமைச்சராக இருந்த காலம் முதல் தொடர்ந்து முன்னெடுத்து வருகிறேன். இப்பூங்கா மதுரை மாட்டுத்தாவணி அருகே அமையவுள்ளது, மதுரை மக்களுக்கு மகிழ்ச்சியான செய்தியாகும்.







# அரசுப் பள்ளி மாணவிகளுக்கு கல்வி உதவித் தொகை





தனியார் நிறுவனங்களின் சமூகப் பொறுப்பு நிதியின் (CSR) மூலம் பள்ளிக்கல்வி மற்றும் உயர்கல்வி பயில்வதற்கான உதவித்தொகை ஏழை எளிய அரசு மற்றும் மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவிகளை எளிதில் சென்றடைய முன் முயற்சிகள் எடுத்து நான் தொடர்ந்து நிறைவேற்றி வருகிறேன்.

அந்த வகையில் HDFC வங்கியின் பரிவர்தன் கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் நமது மதுரை மத்திய தொகுதி மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் அரசு மற்றும் மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் 89 மாணவ மாணவிகளுக்கு 30 லட்சத்து 39 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கல்வி உதவித் தொகையினை இந்தக் கல்வியாண்டில் வழங்கிடச் செய்தேன்.

இதில் முதுநிலைக் கல்வி பயிலும் மாணவர் ஒருவருக்கு ரூ.75000, இளநிலை பொறியியல் மற்றும் சட்டப்படிப்பு பயிலும் 15 மாணவிகள், 3 மாணவர்கள் என 18 பேருக்கு தலா 50000 வீதம் 9 லட்சமும், இளநிலை கலை அறிவியல் பயிலும் 59 மாணவிகள் 8 மாணவர்கள் என 67 பேருக்கு தலா 30000 வீதம் 20 லட்சத்து 10 ஆயிரம் ரூபாயும், 11, 12ஆம் வகுப்பு மற்றும் டிப்ளமோ பயிலும் மாணவர்கள் 3 பேருக்கு தலா 18 ஆயிரம் வீதம் 54 ஆயிரம் ரூபாயும் வழங்கினோம். இதன் மூலம் 74 மாணவிகளும்,15 மாணவர்களும் நேரடியாகப் பயன் பெற்றுள்ளனர்.

கடந்தாண்டு இதேபோல் 97 மாணவ மாணவிகளுக்குக் கல்வி உதவித்தொகை ரூ.32.83 லட்சம் மதிப்பீட்டில் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.



# அருள்மிகு மீனாட்சியம்மன் திருக்கோயில் குடமுழுக்கு பணிகள்







மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்கள் அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் குடமுழுக்கு பணிகள் விரைவில் நடைபெறும் என அறிவித்துள்ளார். கோயில் அறங்காவலர் குழுத் தலைவரும், என் தாயாரும் ஆன திருமதி. ருக்மணி பழனிவேல்ராஜன் அவர்கள் உடன் இணைந்து சென்று முதல்வருக்கு நன்றி தெரிவித்தேன்.

தொடர்ந்து அவரது ஆணைக்கிணங்க வீரவசந்தராயர் மண்டப கட்டுமான பணிகள் மட்டும் பிற கட்டுமானப் பணிகளை மாண்புமிகு இந்து சமய &அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே. சேகர் பாபு அவர்கள் மற்றும் மாண்புமிகு வணிகவரி & பதிவுத்துறை அமைச்சர் திரு.பி.மூர்த்தி அவர்களுடன் இணைந்து ஆய்வு செய்தோம். தொடர்ந்து நடந்து வரும் பணிகளைக் கண்காணித்து வருகிறோம்.

## மீனாட்சியம்மன் கோயில் அருகே கழிப்பறை கட்டிடங்கள்

உலகப் புகழ் பெற்ற அருள்மிகு மீனாட்சியம்மன் திருக்கோயிலுக்குத் தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தந்த வண்ணம் உள்ளனர். அவர்களின் அடிப்படை தேவைகளான குடிநீர், கழிப்பறை உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளைத் தொடர்ந்து நிறைவேற்றி வருகிறேன். எனது தொகுதி மேம்பாட்டு நிதியின் மூலம் கழிப்பறை கட்டிடங்களைக் கட்டித்தந்துள்ள நிலையில் தற்போது தமிழ்நாடு மெர்கன்டைல் வங்கி தொண்டு நிறுவனம் மூலம் கீழச் சித்திரை வீதியில் புதிய கழிப்பறைக் கட்டிடங்களை கட்டி பயன்பாட்டுக்குத் திறந்து வைத்தேன்.

# விடியல் பயணத் திட்டமும், மதுரை மாவட்டமும்



நமது திராவிட மாடல் அரசில் விடியல் பயணத் திட்டம் அமல்படுத்தப்பட்ட பிறகு மக்களின் வாழ்வாதாரம் உயர்ந்துள்ளது. சமூகத்தில் மகளிர் சுயமாக தங்களுடைய குடும்பச் சூழ்நிலைகளின் அடிப்படையில் அவர்களாகவே முடிவு எடுக்கும் நிலை ஏற்பட்டு சமூகத்தில் முன்னேற்றம் அடைந்து வருகின்றனர்.

மதுரை கோட்டத்திற்குட்பட்ட மதுரை, திண்டுக்கல், தேனி மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் தினந்தோறும் சுமார் 7.5 இலட்சம் மகளிர், மதுரை கோட்டம் முழுவதும் இதுவரை 80 கோடி பயணங்கள் சென்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்2022-2023 மற்றும் 2023-2024-ஆம் ஆண்டிற்கான அரசு நிதியில், 2,000 புதிய பேருந்துகளும், 2024-2025-ஆம் ஆண்டிற்கான வரவு-செலவு அறிக்கையில், 3,000 புதிய பேருந்துகளும், 2023-2024 மற்றும் 2024-2025-ஆம் ஆண்டிற்கான ஜெர்மன் நிதிமூலம் 2,666 பேருந்துகளும் என மொத்தம் 7,666 பேருந்துகள் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இதில், மதுரை கோட்டத்திற்கு 683 பேருந்துகளும், ஜெர்மன் நிதி மூலம் 451 பேருந்துகளும் என மொத்தம் 1,134 பேருந்துகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், மதுரை மாவட்டத்தில் 32 புதிய பேருந்துகளை மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் அவர்கள் மற்றும் மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு பி மூர்த்தி அவர்களுடன் இணைந்து பொதுமக்கள் பயன்பாட்டிற்குத் தொடங்கி வைத்தோம்.

மதுரை மாட்டுத்தாவணி பேருந்து நிலைய வளாகத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், மதுரை கோட்டத்தில் பணிக்காலத்தில் இறந்த பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்குப் பணி நியமன ஆணைகளையும் வழங்கினோம்.

## திடீர் நகர் ஆரம்ப சுகாதார நிலையம் – ஆய்வு

நமது மதுரை மத்திய சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திடீர் நகர் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தை ஆய்வு மேற்கொண்டேன்.



திடீர் நகர் ஆரம்ப சுகாதார நிலையம் ஒரு நாளில் சுமார் 200 நபர்கள் பல்வேறு நோய்கள் சம்பந்தமாக சென்று பயன் பெற்று வருகின்றனர். தொடர்ந்து ஆண்டுதோறும் அதிக பிரசவங்கள் நடைபெறக்கூடிய மையமாக இந்த மையம் செயல்படுகிறது



1952 ஆம் ஆண்டு மதுரையில் ஒரு மருந்தக மையமாக நிறுவப்பட்ட இந்த மையம் பின்னர் 1966 ஆம் ஆண்டில் காசநோய் மையத்திற்கான கூடுதல் கட்டிடத்துடன் விரிவாக்கப்பட்டது, பின்னர் மலேரியா பயிற்சி மையம் மற்றும் குடும்பக் கட்டுப்பாடு மையமாகச் செயல்பட்டது. 2015 ஆம் ஆண்டு நகர்ப்புற சுகாதார மையமாக மாற்றப்பட்டது. 2018ஆம் ஆண்டு முதல் பிரசவ சிகிச்சையும் இங்கு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆம்புலன்ஸ் உள்ளிட்ட வாகனங்கள் சென்று வர வசதியாகவும், மருத்துவமனைக்குப் பொதுமக்கள் எளிதில் சென்று வர வசதியாக தற்போது அங்கு புதிய கட்டிடம் அமையவுள்ளது. அதற்கான ஆய்வினை மேற்கொண்டேன்.

## ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் குடிநீர் குழாய் பதிக்கும் பணிகள்



கடந்த 2021 தேர்தல் வாக்குறுதிகளாக அளித்தவைகளில் மக்களுக்கு தங்கு தடையின்றி குடிநீர் வழங்கும் வாக்குறுதியும் அடங்கும். இந்நிலையில், பல்வேறு கட்டங்களாக அதற்கான பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் கடந்த அ.தி.மு.க ஆட்சியில் மதுரை மாநகராட்சி பகுதிகளில் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் மூலம் குடிநீர் குழாய் பதிக்கும் பணிகளை பாதியிலேயே நிறுத்திவிட்டனர். மக்கள் வசிக்கும் நெரிசலான பகுதிகள் மற்றும் குறுகிய தெருக்களில் நீட்டிக்காமல் விட்டுவிட்டனர். அவற்றைக் கண்டறிந்து அனைத்து பகுதிகளுக்கும் குழாய்கள் பதித்திட நடவடிக்கை எடுத்தேன்.

அந்த வகையில் விடுபட்ட பகுதிகளுக்கு குடிநீர் குழாய் அமைக்கும் பணியினை வார்டு 55, ஒர்க் ஷாப் சாலை, கிருஷ்ணராயர் தெரு, சந்தை அருகே தொடங்கி வைத்தேன்.

## அங்குரான் அறிவியல் மையம்





மதுரை மத்திய சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கரிமேடு பகுதியில் 'அங்குரான் அறிவியல் மையம்' அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. CSR திட்டத்தின் கீழ் ரூ.2.50 கோடி மதிப்பீட்டில், அங்குரான் பவுண்டேஷன் சார்பாக இந்த அறிவியல் மையம் அமையவுள்ளது. ஏழை, எளிய அரசுப்பள்ளி மாணவர்கள் தங்கள் கற்றல் திறனை மேம்படுத்திக் கொள்ளும் விதமாக செயல்பாட்டுடன் கூடிய அறிவியல் மையமாக இது திகழ உள்ளது.

## அரசு பள்ளிக்கு அறிவியல் உபகரணங்கள்

கல்வியும்,சுகாதாரமும் இரு கண்களாகக் கருதி முதலமைச்சர் வழியில் அமைச்சர்கள் பணியாற்றி வருகிறோம். அதிலும் அரசுப் பள்ளிகளுக்கு என எண்ணற்ற திட்டப்பணிகளை இந்த அரசு நிறைவேற்றி வருகிறது. தொகுதிக்குட்பட்ட அரசு மற்றும் மாநகராட்சி பள்ளிகளில் கழிப்பறை, வகுப்பறை கட்டிடங்கள், ஸ்மார்ட் வகுப்பறை என எண்ணற்ற திட்டப்பணிகளைக் கடந்த 8 ஆண்டுகளாக நிறைவேற்றித் தந்துள்ளேன்.

அதுமட்டுமன்றி, தனியார் நிறுவனங்களின் சமூகப் பொறுப்பு நிதி மூலம் பல்வேறு பணிகளை ஒருங்கிணைத்து நிறைவேற்றித் தந்துள்ளேன். அந்த வகையில் ஹனிவெல் நிறுவனத்தின் முயற்சியை நான் வரவேற்று மதுரை மத்திய சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தத்தனேரி, அருள்தாஸ்புரம் வார்டு 22இல் உள்ள மாநகராட்சி திரு.வி.க மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு அவர்கள் அளித்த அறிவியல் உபகரணங்கள் தொகுப்பினை வழங்கினேன்.

## விரிவுபடுத்தப்பட்ட பாதாள சாக்கடை திட்டம் அடிக்கல் நாட்டும் விழா

உள்கட்டமைப்பு, சுகாதாரம், கல்வி என அனைத்து துறையிலும் தமிழ்நாடு, இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாக இருக்க வேண்டும் என்பதே நமது முதலமைச்சரின் நோக்கம். அந்த நோக்கத்தை நிறைவேற்றுகின்ற வகையில் வளர்ந்து வரும் மாநகரப் பகுதிகளில் அடிப்படை வசதிகளை பொதுமக்களுக்கு நிறைவேற்றித் தரும் நோக்கத்துடன் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பாக அமைச்சர் கே.என்.நேரு அவர்கள் தலைமையில் மதுரை மாநகராட்சி – அம்ருத் 2.0 திட்டத்தின் கீழ் மதுரை கிழக்கு, திருப்பரங்குன்றம், மதுரை வடக்கு மற்றும் மதுரை தெற்கு ஆகிய சட்டமன்றத் தொகுதிகளில் புதிய பாதாள சாக்கடை திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தோம்.

மதுரை மாநகராட்சிக்கு உட்பட்ட மதுரை கிழக்கு, திருப்பரங்குன்றம், மதுரை வடக்கு, தெற்கு சட்டமன்ற தொகுதிகளில் 471.89 கோடி மதிப்பிலான புதிய பாதாள சாக்கடை திட்டப்பணிகள் தொடங்கப்பட்டுள்ளது.

# மாற்றுத்திறனாளிகளுக்கு மோட்டார் வாகனங்கள்

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள், கால்கள் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளி மாணவ மாணவியர், சுயதொழில் புரிவோர், வீட்டிலிருந்து எளிதில் கல்வி நிலையங்களுக்கும், பணிபுரியும் இடங்களுக்கும் செல்ல இந்தியாவிலேயே முதன்முதலில் அவர்களுக்கு மூன்று சக்கர வண்டி வழங்கும் திட்டத்தைக் கொண்டு வந்து அதனைச் செயல்படுத்தினார்.

நமது தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் அரசு மாற்றுத்திறனாளிகள் நலனில் தனித்த அக்கறை செலுத்தி பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. அத்தகைய திட்டங்களில் ஒன்றுதான் மாற்றுத்திறனாளிகளுக்கான இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களை வழங்கும் திட்டமாகும்.

அந்த வகையில், மதுரை மத்திய சட்டமன்றத் தொகுதி மாற்றுத்திறனாளிகளின் நலன் காப்பதில் முன்மாதிரி தொகுதியாக திகழ வேண்டும் என்ற எண்ணத்தில் அவர்களின் கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றித் தருவதில் கண்ணும் கருத்துமாக இருக்கிறேன். கடந்த 6 மாத காலத்தில் மட்டும் சுமார் 50 லட்சம் மதிப்பிலான மாற்றுத்திறனாளிகளுக்கான இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களை அவர்களை நேரில் சந்தித்து வழங்கினேன்.

இது தவிர பல்வேறு நிகழ்வுகளில் பெறப்படும் கோரிக்கைகளின் அடிப்படையில் தொடர்ந்து அவர்களுக்கு ஸ்கூட்டர்கள் வழங்கி வருகிறோம். அவர்களுக்கான சிறப்பு முகாம்களை அவ்வப்போது நடத்தி அவர்களின் கோரிக்கைகளைப் பெற்று நடவடிக்கை எடுத்து வருகிறேன்.





# சமுதாய வளைகாப்பு





ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் சார்பில் நடைபெறும் சமுதாய வளைகாப்பு விழாவில் கலந்துகொண்டு தாய்மைப்பேறு அடையவுள்ள பெண்களுக்கு சீர்வரிசை பொருட்களை வழங்கினேன். மதுரை மத்திய தொகுதி எஸ்.எஸ். காலனி பகுதியில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஒரு சகோதரனாக இருந்து 100 பெண்களுக்குச் சீர்வரிசை பொருட்களை வழங்கினேன்.

மக்கள் நலன் சார்ந்த சிந்தனை, மனிதநேயம், இரக்கம் ஆகிய மூன்று பண்புகளின் அடையாளமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு மக்கள் நலன் சார்ந்த திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள். கர்ப்பிணி தாய்மார்கள் உடல் ஆரோக்கியத்துடனும், மன மகிழ்ச்சியுடனும் இருக்க அவர்களுக்குச் சரியான முறையில் ஊட்டச்சத்து கிடைத்திட வழி செய்யும் வகையில் இவ்வகை விழாக்களை அரசு நடத்துகிறது. நம் பண்பாட்டு அடையாளமாக இவ்விழா விளங்குவதும், தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் தொடர்ந்து இவ்விழாவில் பங்கேற்பதை மிகவும் நெகிழ்வான ஒன்றாகக் கருதுகிறேன்.



# தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சராக எனது செயல்பாடுகள்

## தகவல் தொழில்நுட்பவியல் துறை சார்ந்த நிகழ்ச்சிகள்




TANFINET-ல் அதிகாரப்பூர்வ இணைய சேவை வழங்குநர்களுக்கான அறிவிப்பு. தகவல் தொழில்நுட்பத்துறை தமிழ்நாடு கண்ணாடி இழை வலை அமைப்பு நிறுவனம் மூலமாக தமிழ்நாட்டின் கடைக்கோடி பகுதிகளுக்கும் இணைய வசதிகளைக் குறைந்த விலையில் வழங்குவதற்காக தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. முதற்கட்டமாக 960 கிராம பஞ்சாயத்துகளில் உயர்தர இணைய சேவை வழங்கும் பொருட்டு அதிகாரப்பூர்வ இணைய சேவை வழங்குநர்களாக பதிவு செய்வதற்கான அறிவிப்பு கடந்த டிசம்பர் 4 அன்று வெளியிடப்பட்டது.

நம் தாய் தமிழ் மொழியை, வளரும் தொழில்நுட்ப யுகத்திற்கு ஏற்றவாறு தகவமைக்கச்செய்தல், உலகெங்கும் வாழும் தமிழ் மக்களின் பிள்ளைகளுக்குத் தாய் மொழியைக் கற்பிக்க வேண்டும் என்கிற தொலைநோக்குடன், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களால் தொடங்கப்பட்ட தமிழ் இணையக் கல்விக்கழகம் (TVA) ஒருங்கிணைக்கும் கணித்தமிழ்ச் சொற்பொழிவுகளின் முதல் நிகழ்ச்சியை மகளிர் கல்லூரியான எத்திராஜ் கல்லூரியில் தொடங்கி வைத்தேன். [17/12/2024]








SKOCH சில்வர் விருது: தகவல் தொழில்நுட்பத் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் நிறுவனத்துக்கு (ICT Academy), சுமார் 22,000 மாணவர்களுக்கு ஹனிவெல் நிறுவனத்தின் சமூகப் பொறுப்பு நிதியின் கீழ் செறிவான திறன் பயிற்சி வழங்கியமைக்காக திறன் பயிற்சி வழங்கல் பிரிவின்கீழ் SKOCH சில்வர் விருது வழங்கப்பட்டது. விருதினைப் பெற்ற பின்பு, என்னை முகாம் அலுவலகத்தில் சந்தித்த ICT Academy நிறுவனத்தின் தலைமை நிர்வாக அலுவலர் திரு. ஸ்ரீகாந்த் அவர்களுக்கு வாழ்த்து தெரிவித்தேன்.






தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையின் கீழ் செயல்படும் தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் சார்பில் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் படைப்புகளை உலகத் தமிழர் யாவரும் எளிதில் படித்து பயன்பெறும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள கலைஞர் கருவூலம் சிறப்பு இணையப் பக்கத்தையும் (http://tamildigitallibrary.in/kalaignar), இந்நிறுவனம் உருவாக்கியுள்ள சங்கத்தமிழ் நாள்காட்டியினையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தலைமைச் செயலகத்தில் வெளியிட்டார். [04/02/2025]

இவ்வாண்டு நடைபெற்ற Umagine 2025 தகவல் தொழில்நுட்ப உச்சி மாநாட்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கோவையில் இரண்டு மில்லியன் சதுர அடி பரப்பளவில் செயற்கை நுண்ணறிவு சார்ந்த தகவல் தொழில்நுட்ப பூங்கா அமைக்கப்படும் என அறிவித்ததைத் தொடர்ந்து, அதற்கான இடத்தைத் தேர்வு செய்ய கோவை விளாங்குறிச்சி பகுதியில் அரசு அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டேன். [01/02/2025]






தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (ELCOT) இந்தியத் தொழில் கூட்டமைப்புடன் (CII) இணைந்து சென்னையில் ஒருங்கிணைத்த 22வது CII Connect மாநாட்டில் கலந்துகொண்டு சிறப்புரை நிகழ்த்தினேன். [17/12/2024]

## UmagineTN-2025 தகவல் தொழில்நுட்ப உச்சி மாநாடு

தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை சார்பில், நந்தம்பாக்கம் சென்னை வர்த்தக மையத்தில், நடைபெற்ற UmagineTN 2025, தகவல் தொழில்நுட்ப உச்சி மாநாட்டை, மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு .க. ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார். கழக ஆட்சியில் தொடங்கப்பட்டு, தொடர்ச்சியாக மூன்றாவது முறையாக நடைபெற்ற இந்த மாபெரும் மாநாட்டில், 13000-க்கும் மேலான தகவல் தொழில்நுட்ப துறை சார்ந்த வல்லுநர்கள், பணியாளர்கள், கல்லூரி பேராசிரியர்கள், மாணவர்கள், மற்றும் அரசு அலுவலர்கள் பங்கேற்றனர்.

- இந்த மாநாட்டின் மூலம் 80-க்கும் மேற்பட்ட புத்தொழில் நிறுவனங்களுக்கு அடுத்த கட்ட வளர்ச்சிக்கு முதலீடு அளிப்பதற்கான முதலீட்டாளர்கள் கிடைத்துள்ளனர்.
- 10 புதிய தொழில்நுட்ப படைப்புகள் வெளியிடப்பட்டன. இவற்றுள் ஆழ்நிலை தொழில்நுட்ப வன்பொருள்கள், செயற்கை நுண்ணறிவு மென்பொருட்களும் அடங்கும்.
- கருத்தரங்க அமர்வுகளில் 170 அறிஞர்கள் கருத்துரை வழங்கினர்.
- தொழில்நுட்ப கண்காட்சி பகுதியில், 57 புத்தொழில் நிறுவனங்கள் தங்களின் படைப்புகளைக் காட்சிப்படுத்தினர்.

ஆயிரக்கணக்கான ஆர்வமுள்ள பங்கேற்பாளர்களுடன் வெற்றிகரமாக நடைபெற்ற இந்த தொழில்நுட்ப மாநாட்டின் நிறைவு விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் காணொளி காட்சி வாயிலாக கலந்து கொண்டு நிறைவுரை வழங்கி சிறப்பித்தார். (09/01/2025 - 10/01/2025)

# கருத்தரங்குகள், முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகள்

தகவல் தொழில்நுட்பம் , இணைய பாதுகாப்பு, செயற்கை நுண்ணறிவு, தொழில் வளர்ச்சி, திறன் மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் தொழில் கூட்டமைப்புகள், நிறுவனங்கள், சங்கங்கள் ஒருங்கிணைக்கும் கருத்தரங்குகள், கல்லூரி பல்கலைக்கழகங்களில் நடைபெறும் அறிவு சார்ந்த வாதங்கள், பட்டமளிப்பு விழாக்களில் கலந்து கொண்டு நமது திராவிட மாடல் அரசு தொலைநோக்குப் பார்வையோடு மேற்கொண்டு வரும் மேம்பாட்டு திட்டங்கள், உலகளாவிய போக்குகள் ஆகியவை குறித்து எனது கருத்துகளைப் பதிவு செய்து வருகிறேன்.



1

இணையப் பாதுகாப்பு குறித்து Association of Anti-Virus Asia Researchers நிறுவனம் நடத்திய 'Global Cybersecurity Summit' மாநாட்டில் கலந்து கொண்டு, இணையப் பாதுகாப்பிற்கு தமிழக அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து எடுத்துரைத்தேன். (06/12/2024)



3

கேரள முதல்வர் திரு. பினராயி விஜயன் அவர்களால் காணொளி வாயிலாக துவக்கி வைக்கப்பட்ட "Kerala Literature Festival–ன் 8ம் ஆண்டு விழாவில் கலந்து கொண்டேன். வளமான இலக்கிய பாரம்பரியமும், மொழி மீதான தீவிர காதலும், கலாச்சார பன்முகத்தன்மையும் கொண்ட கேரள மக்களின் கலை வெளிப்பாட்டின் சான்றாக விளங்கும் இவ்விழாவில் தொடர்ந்து மூன்றாவது முறையாக பங்கேற்றதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். (23/01/2025)





2



சென்னை மகளிர் கிறிஸ்துவக் கல்லூரியில் The RISE நிறுவனம் நடத்திய 14வது உலகளாவிய தமிழ் தொழில்முனைவோர் மற்றும் தொழில்நுட்ப நிபுணர்களின் உச்சி மாநாட்டில் கலந்து கொண்டு "Leading the Deep Tech Era " என்ற தலைப்பில் கருத்துரை வழங்கினேன். (08/01/2025)

கிரசென்ட் கல்லூரியில் UEF தொழில் கூட்டமைப்பு நடத்திய UEF-BSACIST EI Symposium 2025 நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கருத்துரையாற்றினேன். ஒரு நூற்றாண்டு காலமாக தமிழகம் கல்வி, சமூக வளர்ச்சி, மனிதவள மேம்பாடு ஆகியவற்றில் கவனம் செலுத்தியதன் விளைவாக அறிவார்ந்த சமூகத்தைத் தமிழ்நாடு பெற்று இருக்கிறது என்று கல்வியின் அவசியத்தை எடுத்துரைத்தேன். இந்நிகழ்வில் 121 புத்தாக்க நிறுவன பொருள்களின் தொகுப்பை வெளியிட்டு புதிய தொழில் வளர் காப்பக நிறுவனங்களைத் தொடங்கி வைத்தேன். (20/02/2025)



4



5

TIOL நிறுவனம் நடத்திய TIOL Corporate India Awards 2025 விருது வழங்கும் விழாவில் ஒன்றிய அமைச்சர் திரு. நிதின் கட்கரி மற்றும் நீதிபதி திரு. ஷிவ கீர்த்தி சிங் ஆகியோருடன் கலந்து கொண்டேன். உலகப் பொருளாதாரத்தில் இந்தியாவின் தாக்கம் அதிகரித்து வருவதையும் உலக அரங்கில் இந்தியா ஒரு பொன்னான தருணத்தில் இருப்பதையும் குறிப்பிட்டேன். (01/03/2025)

சென்னையில் ASSOCHAM India நடத்திய "Smart Data Centers & Cloud Infrastructure Conclave 2025" நிகழ்வில் கலந்து கொண்டு "Empowering Global Digital Change: Tamil Nadu's Data & Cloud Vision" என்ற தலைப்பில் கருத்துரையாற்றினேன். கல்வி மற்றும் மனித வளத்தில் தமிழ்நாடு கொண்ட தொலைநோக்குப் பார்வை பற்றியும் மின்னணு சாதனங்கள் உற்பத்தியில் இந்தியாவின் தலைசிறந்த மாநிலமாக விளங்குவது பற்றியும் எடுத்துரைத்தேன் .(05/05/2025)



6




7

தி ஹிந்து குழுமத்தால் நடத்தப்படும் The Hindu Huddle நிகழ்வில் மாண்புமிகு கேரள அமைச்சர் திரு. பி. ராஜீவ் அவர்களுடன் கலந்து கொண்டு More Than a Sum of Parts- Reimagining India's Federalism என்ற தலைப்பில் கருத்துரையாற்றினேன். தொகுதி மறு சீரமைப்பு மற்றும் இந்தியாவில் கூட்டாட்சி கொள்கைகளைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியம் ஆகியவற்றைக் குறித்து எனது கருத்துக்களைத் தெரிவித்தேன். (10/05/2025)

International Fiscal Association நடத்திய "SRC International Taxation Conference" நிகழ்ச்சியில் கலந்து கொண்டு Trumponomics and Its Aftershocks- Rewiring the Global Economic Order என்ற தலைப்பில் ஆற்றிய கருத்துரையில் நிர்வாகத்தையும் வரிவிதிப்பையும் சீர்திருத்த வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்தேன். (17/05/2025)



8

இவை தவிர, "Cloud & Datacenter Convention 2025 ", "Toastmasters போன்ற பல கருத்தரங்குகளில் கலந்து கொண்டு எனது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டேன்.

# தொழில்நுட்ப நிறுவனங்கள் தொடக்க விழாக்கள்






iMerit Automotive AI Centre of Excellence நிறுவனத்தின் கிளையை கோயம்புத்தூரில் தொடங்கி வைத்து, தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களைத் தமிழ்நாட்டிற்கு ஈர்ப்பதற்காக முதல்வர் எடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்து விவரித்தேன். (16/12/2024)





ஸ்வீடனுக்கு வெளியே அமைந்த Robot System Products நிறுவனத்தின் முதல் உற்பத்தி ஆலையின் துவக்க விழா சென்னையில் நடைபெற்றது, இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டேன். (24/01/2025)





சென்னையில் “SES” நிறுவனத்தின் புதிய அலுவலகத்தைத் திறந்து வைத்து, தமிழகத்தின் கல்வித் தரத்தையும் அனைத்து துறைகளிலும் தமிழகம் அடைந்துள்ள வளர்ச்சியையும் எடுத்துரைத்தேன். (08/04/2025)





கோவையில் “SNS iNNovations Hub” நிறுவனத்தின் இந்தியாவின் மிகப்பெரிய புத்தாக்க வளாகத்தைத் திறந்து வைத்து, மாணவர்கள் மற்றும் புத்தாக்க நிறுவன நிறுவனர்களுடன் கலந்துரையாடி மகிழ்ந்தேன். (03/05/2025)

# கல்வி நிலையங்களில்...



சாய்ராம் பொறியியல் கல்லூரி மற்றும் ராஜலட்சுமி பொறியியல் கல்லூரி இணைந்து நடத்திய Smart India Hackathon 2024 நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பொது சேவை வழங்கல்களில் உள்ள சவால்களுக்கு புதுமையான முறையில் தீர்வு காண்பதற்கு ஹேக்கத்தான்கள் எந்த அளவு உதவுகின்றன என்று எடுத்துரைத்தேன். (12/12/2024)






நான் பொறியியல் பட்டம் பெற்ற திருச்சி NIT கல்லூரியில் நடைபெற்ற உலகளாவிய முன்னாள் மாணவர் சந்திப்பில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு, என் வாழ்க்கையையும் பலரின் வாழ்க்கையையும் செதுக்கிய அந்நிறுவனத்தின் சிறப்பு குறித்து உரையாற்றியது எனக்கு அளவற்ற மகிழ்ச்சியை அளித்தது. (04/01/2025)





சென்னையிலுள்ள ஸ்டெல்லா மேரீஸ் கல்லூரி மற்றும் Trinity Western University இணைந்து நடத்திய 10வது ஆண்டு தலைமைத்துவ மாநாட்டில் கலந்துகொண்டு செயற்கை நுண்ணறிவு மற்றும் தகவல் பகுப்பாய்வு குறித்து கருத்துரையாற்றினேன். (04/01/2025)





மதுரையில் நடைபெற்ற அமெரிக்கன் கல்லூரியின் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு, தமிழகத்தின் கல்வி வளர்ச்சியில் 19-ஆம் நூற்றாண்டில் கிறிஸ்தவ மிஷனரிகளின் பங்களிப்பையும், அதைத்தொடர்ந்து உயர்கல்வி வளர்ச்சிக்கு 20-ஆம் நூற்றாண்டு தொடங்கி நீதிக்கட்சி முதல் திராவிட முன்னேற்றக் கழகம் வரை திராவிட இயக்கம் ஆற்றிய பங்களிப்பைப் பற்றியும் எடுத்துரைத்தேன். (29/03/2025)





50 ஆண்டுகளுக்கு முன்பு நான் சிறுவனாக நுழைந்த தி லாரன்ஸ் ஸ்கூல், லவ்டேல் பள்ளியின் 167வது நிறுவனர் தின விழாவில் தலைமை விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றியதில் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தேன். (02/05/2025)





# சட்டமன்றத்தில்...

சட்டமன்றத்தில் 2025-26 ஆம் நிதியாண்டிற்கான பட்ஜெட் கூட்டத் தொடரில் , தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறைக்கான மானிய கோரிக்கைகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு, சட்டமன்ற உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகளுக்கும் வெட்டுத் தீர்மானங்களுக்கும் விளக்கம் அளித்ததோடு தகவல் தொழில்நுட்பத் துறை சீரான முறையில் மேற்கொண்டு வரும் தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு விரிவாக்கம் , அரசு சேவைகள் டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் தொலைத்தொடர்பு விரிவாக்க திட்டப் பணிகள் ஆகியவற்றைப் பதிவு செய்தேன். அத்தோடு இவ்வாண்டுக்கான தகவல் தொழில்நுட்பத் துறை சார்ந்த அறிவிப்புகளையும் வெளியிட்டேன். (25/04/2025)

## தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை சார்ந்த அறிவிப்புகள் 2025-2026

- தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (ELCOT) ஒரு முகமையாகச் செயல்பட்டு ஆதார் சேவைகளை மக்கள் எளிதில் பெற கூடுதலாக 50 புதிய ஆதார் பதிவு மையங்களைத் தொடங்குதல்

எல்காட்
ELCOT

- பொதுமக்கள் விரைவாக அணுகக்கூடிய நிருவாகத்தை உருவாக்கும் பொருட்டு, அரசு சேவைகளை எளிதாக்கும் வகையில் டிஜிட்டல் பரிவர்த்தனையை ஊக்குவிக்கும் ‘ இ- சேவை‘ மற்றும் பிற துறைகள் சார்ந்த ‘வாட்ஸ்ஆப்‘ சேவைகளைச் செயலியில் ஒருங்கிணைத்து வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படும்.

- பல்வேறு அரசு நலத்திட்ட சேவை வழங்கலில், வெளிப்படைத்தன்மை மற்றும் அவைகளின் செயல்திறனை மேம்படுத்தவும், பயனாளிகளின் அடையாளத்தைச் சரிபார்க்கவும், e-KYC கைபேசி செயலி மற்றும் பாதுகாப்பான எளிதில் விரிவாக்கக்கூடிய பொதுவான e-KYC இணையதளம் நிறுவப்படும்.

- தமிழ் மின் நூலகத்தைப் (தமிழ்நாட்டின் வரலாறு, இலக்கியம், பண்பாடு, அரசியல், சமூகம் உள்ளிட்ட தகவல்கள்) பல்லூடகப் பொருண்மைகளுடன் (ஒளி-ஒலிச் சுருள்கள், நாடாக்கள், ஒலித்தட்டுகள், அரிய ஒளிப்படங்கள்) கூடிய தளமாக மேம்படுத்துதல்.

- தமிழ் இலக்கியம் / மொழியியல் பயிலும் மாணவர்களுக்கு மொழி தொழில்நுட்ப (இயற்கை மொழி செயலாக்கம், மொழிபெயர்ப்புக் கருவிகள், பேச்சினை அறிதல், உரை பகுப்பாய்வு) பயிற்சி அளித்தல்.

- தொழில்நுட்பத் தயாரிப்பு வடிவமைப்புத் திட்டம் (Technology Product Design Scheme). தமிழ்நாட்டில் தயாரிக்கப்பட்டது (Made in Tamil Nadu) என்பதனை ஊக்குவிப்பதில் அரசு ஆர்வமாக உள்ளது.



# தொகுதி மறுவரையறைக்கு எதிரான
# கூட்டு நடவடிக்கை குழு தொடர்பான பணிகள்

மக்கள் தொகை கட்டுப்படுத்தும் முயற்சிகளைச் சிறப்பாக நடைமுறைப்படுத்தி தங்கள் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்திய தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாநிலங்கள் மற்றும் சில மாநிலங்களை வஞ்சிக்கும் வகையில் 2026 ஆம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையில் தொகுதி மறுவரையறை மேற்கொள்ள ஒன்றிய அரசு எடுத்து வரும் முயற்சிகளுக்கு எதிராகப் பாதிக்கப்படும் மாநிலங்களை ஒன்று திரட்டி ஒரு கூட்டு நடவடிக்கை குழுவை உருவாக்கும் பணியினை நமது மாநில உரிமைக் காவலர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்டார். 22/03/2025 அன்று சென்னையில் நடைபெறும் கூட்டு நடவடிக்கை குழுவின் முதல் கூட்டத்திற்கு கேரள மாநில முதலமைச்சர் மற்றும் பல்வேறு அரசியல் தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கும் பணியினை முதலமைச்சர் அவர்கள் எனக்கும் மரியாதைக்குரிய நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்க பாண்டியன் அவர்களுக்கும் வழங்கினார்கள்.

அதன்படி 14/03/2025 அன்று கேரளா சென்று மாண்புமிகு கேரள முதலமைச்சர் திரு. பினராயி விஜயன் அவர்களுக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் அழைப்பு விடுத்தேன். அத்தோடு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கேரள மாநிலச் செயலாளர் திரு. பினோய் விஸ்வம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் கேரள மாநிலச் செயலாளர் திரு. M.V. கோவிந்தன், கேரள காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த திரு. P.J. ஜோசப், மற்றும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தலைவர் திரு.சய்யித் சாதிக் அலி ஷிஹாப் தங்கல் ஆகியோருக்கும் அழைப்பு விடுத்தேன்.

மக்கள் தொகையைக் கட்டுப்படுத்திய மாநிலங்களின் உரிமையைப் பறிக்கும் ஒன்றிய அரசின் முயற்சிகளுக்கு தமிழ்நாடு, கேரளா, தெலுங்கானா, கர்நாடகா, பஞ்சாப், மேற்குவங்கம் உள்ளிட்ட மாநிலங்களின் ஒருமித்த எதிர்ப்பைப் பதிவு செய்த இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க, கூட்டு நடவடிக்கை குழு கூட்டத்தில் பங்கேற்க 21/03/2025 அன்று சென்னை வருகை தந்த மாண்புமிகு கேரள முதலமைச்சர் அவர்களை விமான நிலையத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்க பாண்டியன் அவர்களுடன் வரவேற்றேன்.









# தேசிய அளவில் கவனம் பெற்ற நேர்காணல்கள் மற்றும் கட்டுரைகள்

இரு மொழிக் கொள்கை, மாநில சுயாட்சி போன்ற நமது கழகத்தின் உயிர் மூச்சான கொள்கைகளின் அடிப்படையில் நமது மாண்புமிகு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசு, ஒன்றிய அரசு நிர்ப்பந்திக்கும் புதிய கல்விக் கொள்கை, தொகுதி மறு வரையறை போன்ற நடவடிக்கைகளையும், ஆளுநரின் அதிகார அத்துமீறல்களையும் சமரசமின்றி எதிர்த்து வருகிறது. இது குறித்து தேசிய அளவில் தவறான கருத்துக்கள் பொய் பிரச்சாரமாக மேற்கொள்ளப்பட்ட நிலையில், அவற்றை மறுத்து பிற மாநிலங்களில் வாழும் பொது மக்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் நமது கொள்கை நிலைப்பாட்டின் நியாயத்தை விளக்கும் வகையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்தியா டுடே போன்ற பல்வேறு தேசிய செய்தி தொலைக்காட்சிகளுக்கும், கரண் தாப்பர், பர்கா தத் போன்ற மூத்த ஊடகவியலாளர்களுக்கும் நேர்காணல்கள் வழங்கினேன். அத்தோடு, இந்தியன் எக்ஸ்பிரஸ், டெக்கன் ஹெரால்ட், கல்ப் நியூஸ் போன்ற புகழ்பெற்ற பத்திரிகைகளுக்குக் கட்டுரைகளும் வழங்கினேன். இதன் மூலம் நமது திராவிட இயக்கத்தின் கொள்கை நிலைப்பாடு தேசமெங்கும் பரவலாக மக்களை சென்று சேர்ந்தது, எனது பணியை அங்கீகரிக்கும் விதமாக நமது கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எனது கட்டுரைகள், பேட்டிகள் சிலவற்றை தமது X சமூக வலைத்தளத்தில் பதிவிட்டு ஊக்கப்படுத்தியது பெருமகிழ்ச்சி அளித்தது.




மும்மொழிக் கொள்கை பற்றி திரு. கரண் தாப்பர் அவர்களுடன் தி வயர் ஊடகத்தில் கலந்துரையாடினேன். 14 லட்சம் பார்வையாளர்கள் இதுவரை இந்த நேர்காணலைக் கண்டுள்ளனர். (03/03/2025)




மும்மொழிக் கொள்கை, தொகுதி மறுவரையறை உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து மோஜோ ஸ்டோரி ஊடகத்தில் திருமதி பார்கா தத் அவர்களுடன் கலந்துரையாடினேன். (17/03/2025)

| கட்டுரை பெயர் | வெளியான நாளிதழ் / இணையதளம் | பொருண்மைகள் |
|---|---|---|
| A fig leaf for an imposition | இந்தியன் எக்ஸ்பிரஸ் (07/03/2025) | இருமொழிக் கொள்கை |
| Centre must focus on North's progress instead of threatening us | இந்தியன் எக்ஸ்பிரஸ் (13/03/2025) | மும்மொழிக் கொள்கை, தொகுதி மறுவரையறை |
| Why the rest should learn from the best | தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் (17/03/2025) | இருமொழிக் கொள்கை |
| Idea Exchange | இந்தியன் எக்ஸ்பிரஸ் (24/03/2025) | தேசிய கல்விக் கொள்கை, தொகுதி மறுவரையறை, கூட்டாட்சி தத்துவம் |
| Why Tamil Nadu stands firm against centralised control | கல்ஃப் நியூஸ் (25/03/2025) | தொகுதி மறுவரையறை, கூட்டாட்சி தத்துவம் |
| Why leave successful model for unsuccessful one? | டெக்கான் ஹெரால்டு (26/03/2025) | தேசிய கல்விக் கொள்கை, மும்மொழி கொள்கை |
| South's concerns about Delimitation are well founded | அவுட்லுக் இந்தியா (30/03/2025) | தொகுதி மறுவரையறை |
| A victory for all citizens, states | இந்தியன் எக்ஸ்பிரஸ் (17/04/2025) | உச்ச நீதிமன்றத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பு |

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து மாநில அரசுகளின் மாண்பைக் காக்கும் வகையில் ஆளுநர்களின் அதிகாரங்களுக்கு தெளிவான வரையறை வழங்கிய உச்சநீதிமன்றத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பின் முக்கியத்துவம் குறித்து தலைமைச் செயலகத்தில் நடந்த செய்தியாளர் சந்திப்பில் பல்வேறு ஊடகங்களுக்கு நேர்காணல் அளித்தேன். (09/04/2025)





தேசிய அளவில் கூட்டாட்சி குறித்த மிக முக்கியமான விவாதத்தைத் துவக்கி வைத்தது அரை நூற்றாண்டுக்கு முன்னர் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அமைத்த ராஜமன்னார் குழு வழங்கிய அறிக்கை. தற்போது, மாநில உரிமைகள் முன் எப்போதும் இல்லாத தாக்குதல்களை எதிர்கொள்ளும் இவ்வேளையில், ஒன்றிய – மாநில உறவுகள் குறித்து ஆராய்ந்து அறிக்கை வழங்க தலைவர் கலைஞர் வழியில் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதியரசர் திரு. குரியன் ஜோசப் அவர்கள் தலைமையில் உயர்மட்டக் குழு அமைத்திருப்பதன் முக்கியத்துவத்தை, தலைமைச் செயலகத்தில் நடந்த செய்தியாளர் சந்திப்பில் பல்வேறு ஊடகங்களுக்கு அளித்த பேட்டியில் விளக்கினேன். (17/04/2025)



## அயல்நாட்டு தூதர்களுடன் சந்திப்பு, தூதரக நிகழ்ச்சிகளில் பங்கேற்பு:



அமெரிக்காவின் கனெக்டிகட் மாகாண ஆளுநர் திரு. நெட் லாமண்ட் தலைமையிலான குழுவினரைச் சென்னை முகாம் அலுவலகத்தில் சந்தித்தேன். பெப்ஸிகோ நிறுவனத்தின் முன்னாள் தலைவரும், என் நெருக்கமான நண்பருமான திருமதி இந்திரா நூயி மற்றும் கனெட்டிகட் மாகாணத்தை சேர்ந்த பல்வேறு தொழில், கல்வித் துறையைச் சேர்ந்த முக்கிய நபர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (06/03/2025)



பிரான்ஸ் நாட்டின் Regional Council of Région Centre-Val de Loire பிராந்திய துணைத்தலைவர் மேடம் டெல்பின் பெனாசி தலைமையிலான குழுவினரை எனது சென்னை முகாம் அலுவலகத்தில் சந்தித்தேன். மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. ராஜேந்திரன் அவர்களும், பிரான்ஸ் துணைத் தூதர் திரு எத்தியென் ரோலாண்ட்-பீக் அவர்களும் கலந்துகொண்டனர். (05/03/2025)



சென்னை தலைமைச் செயலகத்தில் திரு. கேரி சஸ்மேன் தலைமையிலான குழுவினரைச் சந்தித்தேன். தொழில்துறை சூழல் அமைப்பு, டிஜிட்டல் மாற்றங்கள் ஆகியவற்றைக் குறித்து கலந்துரையாடினோம். (17/03/2025)






பிளாஸ்டிக் மாசுபாட்டை எதிர்கொள்ளும் உலகளாவிய பயணத்தின் பகுதியாக சென்னையில் வந்திருந்த பிரஞ்சு கப்பல் Plastic Odysseyயை பார்வையிட்டேன். குறைந்த தொழில்நுட்பத்தில் செயல்படும் பிளாஸ்டிக் மறுசுழற்சி தீர்வுகள், உள்ளூர்வாசிகளுக்கு வாய்ப்பளிக்கும் மைக்ரோ-ரீசைக்கிளிங் தொழிற்சாலைகள் குறித்து கலந்துரையாடப்பட்டது. (மார்ச் 2025)

ஆஸ்டிரியாவின் ஸ்டைரியா மாநிலத்தைச் சேர்ந்த உயர்மட்ட வணிகக் குழுவினரை எனது சென்னை முகாம் அலுவலகத்தில் சந்தித்தேன். இந்தச் சந்திப்பு, ஸ்டைரியா மாநிலத்திற்கும் தமிழ்நாட்டிற்குமான பொருளாதார ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதாக அமைந்தது. (மார்ச் 2025)





இந்தியாவுக்கான பிரான்ஸ் தூதர் திரு. தியரி மாத்தூ மற்றும் சென்னை, புதுச்சேரிக்கான துணைத் தூதர் உள்ளிட்ட குழுவினரை, சென்னையிலுள்ள எனது முகாம் அலுவலகத்தில் சந்தித்தேன். பிரான்சின் புத்தொழில் மற்றும் புத்தாக்க நிறுவனங்களுக்கான முதன்மையான மாநாடான VIVATECH-க்கு அவர்கள் வழங்கிய அழைப்பை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டேன். (மார்ச் 2025)

சென்னையிலுள்ள தலைமைச் செயலகத்தில், தி ஆசிய நியூசிலாந்து அறக்கட்டளையின் (The Asia New Zealand Foundation) திட்ட மேலாளர் முனைவர் ஜேம்ஸ் டோ அவர்கள் தலைமையிலான இளம் தலைவர்கள் குழுவினரைச் சந்தித்து கலந்துரையாடினேன். எங்கள் உரையாடல், தமிழ்நாட்டின் தொழில்நுட்பம், டிஜிட்டல் மயமாக்குதல் மற்றும் புத்தாக்கத்தை மையப்படுத்தியதாக அமைந்தது. (மார்ச் 2025)

## கழக நிகழ்ச்சிகள்

கழகத் தலைவரின் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டங்கள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்தநாளை முன்னிட்டு, திருச்சி கலைஞர் அறிவாலயத்தில், திருச்சி தெற்கு மாவட்டம் மற்றும் திருச்சி கிழக்கு மாநகர திமுக சார்பில் ஒருங்கிணைக்கப்பட்ட 'பிறந்தநாள் விழா' சிறப்பு கருத்தரங்கத்தை மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்களுடன் இணைந்து கலந்து கொண்டேன்.



சென்னை கிழக்கு மாவட்டம், எழும்பூர் வடக்கு - தெற்கு பகுதி தி.மு.க. சார்பில், திமுக சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் & மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. பி. கே. சேகர் பாபு அவர்களின்முன்னிலையில் நடைபெற்ற 'மக்கள் முதல்வரின் மனிதநேய விழா-2025' நிகழ்ச்சியைத் தொடங்கிவைத்து தலைவரின் சிறப்புகளையும் ஆட்சிமுறை குறித்தும் உரையாற்றினேன். (26/04/2025)



சென்னை அன்பகத்தில் நடைபெற்ற விழாவில், கடந்த நாடாளுமன்றத் தேர்தல் பரப்புரையின் போது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரைகளின் தொகுப்பாக உருவாக்கப்பட்டுள்ள கருஞ்சட்டைப் பதிப்பகத்தின், 'பாசிசத்திற்கு எதிரான ஸ்டாலின் குரல்' புத்தகத்தினை வெளியிட்டு உரையாற்றினேன்.



### திராவிட அறநெறியாளர்

# தமிழவேள் பி.டி. ராஜன்

## வாழ்வே வரலாறு

## 133வது பிறந்தநாள் மலர் வெளியீட்டு விழா

நம் முன்னோரை நினைவுகூர்ந்து, அவர்தம் வாழ்வையும், வரலாற்றையும் அடுத்த தலைமுறைக்குக் கொண்டு சேர்ப்பது தமிழ் பண்பாட்டின் மிக முக்கிய அம்சமாகும். அவ்வகையில், எனது பண்பாட்டுக் கடமையை நிறைவேற்றும் விதமாக, நீதிக்கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவரும், சென்னை மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சருமான என் தாத்தா தமிழவேள் பி.டி. ராஜன் அவர்களின் 50ஆவது நினைவு நாளை முன்னிட்டு ஒரு நினைவு மலரை டிஜிட்டல் பதிப்பாக உருவாக்கினோம். அதனை எங்கள் பாசத்திற்குரிய தலைவர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார்கள். அதனைத் தொடர்ந்து, அந்த டிஜிட்டல் பிரதியை மேலும் செழுமைப்படுத்தி, தமிழவேள் அவர்களின் வாழ்க்கை வரலாற்றையும், அவர்தம் சிந்தனைகளையும் திராவிட இயக்கத்தின் சாதனைகளையும் அனைவரும் படித்துப் பயன்பெறும் வகையில், அவரது 133வது பிறந்தநாளை முன்னிட்டு, “திராவிட அறநெறியாளர் தமிழவேள் பி. டி. ராஜன் வாழ்வே வரலாறு” எனும் பிறந்தநாள் மலரை உருவாக்கினோம். இந்த வரலாற்றுக் கருவூலத்தை மாநில உரிமைக் காவலர், நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தமது பொற்கரங்களால் வெளியிட்டார், திராவிட இயக்கத்தின் முக்கிய தூண்களில் ஒருவரும், தமிழவேள் அவர்களின் அருமை நண்பருமான சர் ஏ.டி. பன்னீர்செல்வம் அவர்களின் பெயரனும், மதிப்பிற்குரிய மேனாள் நீதியரசருமான திரு சி.டி. செல்வம் அவர்கள், பிறந்தநாள் மலரின் முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டார்கள். என் தாத்தா காலம் தொட்டு எங்கள் குடும்பத்துடன் நட்பு பாராட்டி வரும் குடும்பங்களைச் சார்ந்த டிவிஎஸ் மோட்டார்ஸ் நிறுவனத்தின் தலைவர் திரு. வேணு சீனிவாசன் அவர்களும், மூத்த பத்திரிகையாளர் திரு. என். ராம் (தி இந்து) அவர்களும் விழா மேடையை அலங்கரித்து நெகிழ்ச்சியான கருத்துரை வழங்கினார்கள். அருள்மிகு மீனாட்சியம்மன் திருக்கோவிலின் அறங்காவலர் குழு தலைவர் என் தாயார் திருமதி ருக்மணி பழனிவேல் ராஜன் அவர்கள், நன்றியுரை வழங்கினார்கள்.

சீரும் சிறப்புமாக நடைபெற்ற விழாவினால், எனது பண்பாட்டுக் கடமையை நிறைவேற்றிய நிறைவோடு மிகுந்த மகிழ்ச்சி அடைந்தேன். இவ்விழாவைச் சிறப்புடையதாக்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு, இத்தருணத்திலும் மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.











# மதுரை மாநகர் மேம்பாட்டுக்கான உட்கட்டமைப்புத் திட்டங்கள்

## கோரிப்பாளையம் பாலம் கட்டும் பணி விரைவு பெறுகிறது



மதுரையின் இதயப்பகுதியான கோரிப்பாளையம் சந்திப்பு மற்றும் வைகை ஆற்றைக் கடந்து செல்லும் வகையில் ரூ.190.40 கோடி மதிப்பீட்டிலான மேம்பாலக் கட்டுமானப் பணிகள் மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு விரைந்து நடைபெற்று வருகிறது. அவ்வப்போது, பணிகளை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.ஏ.வ.வேலு, மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு. பி.மூர்த்தி, ஆகியோருடன் இணைந்து சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து வருகிறோம்.

## அப்பல்லோ சந்திப்புப் பாலம்

கடந்த ஆண்டு மதுரை – தொண்டி சாலையில் ரூ.150.28 கோடி மதிப்பீட்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்த பணிகள் விரைவு பெற்று மேலமடைச் சந்திப்பில் தற்போது பணிகள் நடைபெற்று வருகிறது. விரைவில் இப்பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளது.



## வண்டியூர் கண்மாய் மேம்பாட்டு பணிகள்

மதுரை வண்டியூர் கண்மாயை மேம்படுத்தி அங்கு முன்பு இருந்த பூங்கா மற்றும் வண்டியூர் கண்மாயை ரூ.99 கோடியில் டூரிஸ்ட் ஸ்பாட் திட்டத்தின் கீழ் மேம்படுத்தி சிறந்த பொழுதுபோக்கு இடமாக மாற்றும் பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளது. விரைவில் இப்பூங்கா மக்கள் பயன்பாட்டுக்கு வரும்.



வண்டியூர் கண்மாயின் மையத்தில் அமையும் சிறிய தீவு



வாகன நிறுத்த வசதியுடன் அழகாக்கப்படும் வண்டியூர் கண்மாய்

# மக்கள் குறை தீர்ப்பு

எனது அலுவலகத்தைத் தேடி மக்கள் வருவதைக் குறைக்கும் வகையில் நான் ஆங்காங்கே சில ஏற்பாடுகளைச் செய்துள்ளேன். மதுரை மகபூப்பாளையத்தில் எனது மத்தியத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் இலவச இ–சேவை மைய வசதியோடு தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. எனது இல்ல வளாகத்தில் முகாம் அலுவலகம் செயல்பட்டு வருகிறது.



மேலும் எனது குறைதீர்க்கும் மைய தொலைபேசி எண்

**73055 19999**

மின்னஞ்சல்: **ptrmadurai1@gmail.com**

இந்த அறிக்கையில் உள்ள QR code மூலமாகவும்
எந்த நேரமும் புகார்களையும்,
கோரிக்கைகளையும் மக்கள் அளிக்கலாம்.

தொகுதிக்குட்பட்ட 16 வார்டுகளில் 25 இடங்களில் புகார் பெட்டி நிறுவப்பட்டு அதன் மூலம் மக்கள் என்னைத் தொடர்பு கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது. பெறப்படும் புகார்கள் துறை ரீதியாக அனுப்பி வைக்கப்பட்டு அதன் மீது தொடர் ஆய்வும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.





# நன்றி..!

சுமார் 20 ஆண்டுகளுக்கு மேலாக வெளிநாடுகளில் பணியாற்றிய பிறகு, எனது முன்னோர்கள் வழியில் சமூகநீதி காத்திட திராவிட இயக்கத்திற்கு என்னை அர்ப்பணித்திட வேண்டும் என்கிற ஆவலோடு, பொது வாழ்க்கைக்கு வந்த என் மீது மிகுந்த நம்பிக்கை வைத்து, அரவணைத்து, இரண்டு முறை தொடர்ச்சியாக சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுத்து தற்போது அமைச்சராக பணியாற்றும் வாய்ப்பை ஏற்படுத்திய என் தொகுதி வாக்காளர் பெருமக்களாகிய உங்களுக்கு எனது மனமார்ந்த நன்றியினை மீண்டும் ஒருமுறை தெரிவித்துக் கொள்கிறேன்.

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களால் தொடங்கப்பட்ட தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சராக மாண்புமிகு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலில் திறம்படப் பணியாற்றி வருகிறேன். இந்தத் துறையின் வளர்ச்சிக்கும், தமிழ்நாட்டில் இந்தத் துறையினால் ஏற்படவுள்ள மாற்றத்திற்கும் பல முன்னெடுப்புகளை எடுத்து வருகிறேன்.

நாடு போற்றும் திராவிட மாடல் அரசை வழிநடத்தி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் என்னைத் தொடர்ந்து ஊக்கப்படுத்தி வருகிறார். பொறுப்பு அமைச்சராக என்னை நியமித்து மதுரை மாநகர் மேம்பட பல்வேறு பணிகளைச் செய்வதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் என்னை பணித்துள்ளார்.

மதுரை மக்களின் எண்ணங்களுக்கேற்ப, எனக்கு வாக்களித்த உங்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமாக என்றென்றும் பணியாற்றுவேன் என உறுதியுடன் கூறுகிறேன். நன்றி. வணக்கம்.

தங்கள் அன்புள்ள

**பி.டி.ஆர். பழனிவேல் தியாக ராஜன்.**


மக்கள் தொடர்பு மைய தொலைபேசி
73055 19999

/ptrmadurai /meendumptr /PTRmadurai